கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி, கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஆங்குணம் ஊராட்சியைச் சேர்ந்த பு.தட்சணாமூர்த்தி, ஏ.முருகன், ஏ.மகேஷ், ஆ.சின்னபையன், முனுசாமி, ஆண்டாள், வீரம்மாள், நிர்மலா, பூங்கோடி, உண்ணாமலை உட்பட 25க்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆராஞ்சி ஆறுமுகம், இரா.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி வரதன், ஒன்றிய துணை செயலாளர் இளம்பரிதி, ஆங்குணம் தலைவர் தண்டபாணி, ஆங்குணம் கிளை செயலாளர் விஜி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முரசொலி நாளிதழில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்த முரசொலி முத்து அவர்கள், உடல் நலக்குறைவால் 24.03.2026 அன்று மாலை இயற்கை எய்தினார், திருவொற்றியூர் தெற்கு மாட வீதியில் உள்ள நாட்டுக்கோட்டை சத்திரத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் – மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் ஆகியோர் நேற்று முன்தினம் (25.4.2026) நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டனர். உடன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், மாவட்டப் பிரதிநிதி ஆர்.டில்லி, சீனி கண்ணன், ஜார்ஜ், சூரி, அந்தோணி மற்றும் கழக தோழர்கள் இருந்தனர்.

தமிழ்நாட்டில் – ஒன்றிய அரசு

மீனவர் நலன் மேம்பாட்டிற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !

புதுடெல்லி, மார்ச் 27 –

தமிழ்நாட்டில் மீன்பிடி உள்கட்டமைப்பு மற்றும் மீனவர் நலன் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட்ட நிதியுதவி விவரங்கள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு: –

நம் நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில் ஆழ்கடல் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு மையங்களை மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை வைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

கடந்த மூன்று ஆண்டுகளில் மீன்பிடி உள்கட்டமைப்பு மற்றும் மீனவர் நலன் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதியுதவி விவரங்கள், ஆண்டு மற்றும் மாநில வாரியாக; தருக? மீன்பிடிக் கப்பல்கள், மீன்பிடி வலைகள் மற்றும் மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை தொடங்குவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அதன் விவரம் தருக?

அதற்கு ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் @ லாலன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

மீன்பிடித் துறை, மீன்பிடி அமைச்சகம், கால்நடை பராமரிப்பு மற்றும் 202021 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரையிலான அனைத்து மாநிலங்களிலும்/யூனியன் பிரதேசங்களிலும் மீன்வளத் துறையின் முழுமையான வளர்ச்சிக்காக பால்வளம் ரூ.20,050 கோடி செலவில் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவை (PMMSY) செயல்படுத்தி வருகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு மையங்களின் வளர்ச்சி ஆகியவை PMMSY யின் கீழ் திட்டமிடப்பட்ட முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். இத்தகைய மீன்வள உள்கட்டமைப்பு திட்டங்கள் மத்திய மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே 60:40 விகிதத்தில் செலவு பகிர்வு

அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. நிதி உதவியைப் பெற, சம்பந்தப்பட்ட மாநில அரசு/யூனியன் பிரதேசங்கள், மாநிலப் பங்கு, தேவையான நிலம் மற்றும் தேவையான அனுமதிகள் கிடைப்பதை உறுதிசெய்து, தொழில்நுட்பநிதி சாத்தியமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்திய அரசின் மீன்வளத் துறை, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ், தமிழ்நாட்டில் ரூ.1,237.57 கோடி மதிப்பிலான திட்டங்கள் உட்பட அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் ரூ.21,733.91 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு இது வரை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டங்கள் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதுறைகள், ஒருங்கிணைந்த நீர்வள பூங்காக்கள், உறைபனி மற்றும் குளிர்பதன சேமிப்பு வசதிகள், மீன்வளர்ப்பு (கடல், உவர் நீர் மற்றும் நீர்த்தேக்க மீன்வளம் உட்பட), உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப உட்செலுத்துதல், மீன் விற்பனையை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியது. PMMSY இணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழ் நாட்டிற்கு ரூ. 1237.57 கோடி அனுமதிக்கப்பட்டு அதில் ஒன்றிய அரசின் பங்காக ரூ.474.82 கோடி ஒதுக்கீடு செய்து இதுகாறும் ரூ.153.94 கோடி வழங்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது.

மேலும், இந்திய அரசின் மீன்வளத் துறை, 201819 நிதியாண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை (FIDF) மொத்தமாக ரூ.7522.48 கோடியில் நாட்டில் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பை உருவாக்கி வலுப்படுத்துவதற்காக செயல்படுத்தி வருகிறது. அடையாளம் காணப்பட்ட மீன்பிடி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மாநில அரசுகள்/யூனியன் பிரதேசங்கள், மாநில நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் உட்பட தகுதியான நிறுவனங்களுக்கு (EEs) பல்வேறு மீன்வள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த FIDF அல்லது மாற்றாக 3% வரை சலுகை நிதி வட்டி மானியத்தை வழங்குகிறது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு FIDF இன் கீழ் ஆதரிக்கப்படும் திட்டங்களில் முதன்மையாக மீன்பிடித் துறை முகங்கள், மீன் இறங்கும் மையங்கள், உறைபனிக்கட்டிகள், குளிர்பதன சேமிப்பு, மீன் போக்குவரத்து வசதிகள், ஒருங்கிணைந்த குளிர்பதன சங்கிலி (கடல் மற்றும் உள்நாட்டுத் துறை), நவீன மீன் சந்தைகள், அடைகாக்கும் வங்கிகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள் மையங்கள், மீன் பதப்படுத்தும் அலகுகள், மீன் தீவன ஆலைகள்/தாவரங்கள், நீர்த்தேக்கத்தில் கூண்டு வளர்ப்பு, கடல் வளர்ப்பு போன்றவை. FIDF திட்டத்தின் கீழ், மீன்வளத் துறை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் இதுவரை மொத்தம் 228 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அதில் தமிழ்நாடு மாநிலத்தில் மொத்தம் ரூ.2404.03 கோடியில் 108 திட்டங்கள் உட்பட பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.5559.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

FIDF இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் மாநில வாரியான விவரங்கள் இணைப்பு II இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் 101 அரசும், 7 தனியார் மொத்தம் 108 திட்டங்கள் ரூ.2169 கோடி ஒதுக்கீடு செய்து அதில் ரூ. 1955.98 கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

PMMSY திட்டமானது உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்கள் உட்பட மீனவர்களுக்கு சமூக பாதுகாப்பு நடவடிக்கையை வழங்குகிறது. பிராந்தியங்களில், முழு பிரீமியம் தொகையும் மையத்தால் செலுத்தப்படுகிறது. குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையில் (i) இறப்பு அல்லது நிரந்தர மொத்த ஊனம் (ii) நிரந்தர பகுதி ஊனத்திற்கு ரூ.2,50,000/ மற்றும் (iii) விபத்து ஏற்பட்டால் மருத்துவமனையில் சேர்க்கும் செலவுகள் ரூ.5,00,000/ அடங்கும். 25,000/.

PMMSY கீழ். தமிழகத்தைச் சேர்ந்த மொத்தம் 21.99 லட்சம் மீனவர்களை உள்ளடக்கிய 167.30 லட்சம் மீனவர்களுக்கு குழு விபத்துக் காப்பீட்டுத் தொகைக்காக 149.07 கோடி ரூபாய் பிரீமியமாக ஒன்றிய அரசு தொடங்கப்பட்டதில் இருந்து மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளின் பங்களிப்பு எதுவுமின்றி வழங்கியுள்ளது. PMMSY இன் கீழ், பாரம்பரிய மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் மற்றும் வலைகளை மாற்றுவதற்கு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இதுவரை, 500 மீன்பிடி படகுகள் (மாற்று) மற்றும் வலைகளுக்கான தமிழக அரசின் முன்மொழிவுகள், மத்திய உதவித்தொகை ரூ. 6.30 கோடி உட்பட மொத்தம் ரூ. 25.00 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) PMMSY இன் கீழ் காப்பீடு செய்யப்பட்ட மீனவர்களின் மாநில வாரியான விவரங்கள் இணைப்பு III இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) PMMSY இன் கீழ் காப்பீடு திட்டம் வாயிலாக தமிழ் நாட்டில் 21,99,335 மீனவர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் (2022-23 முதல் 2024-25 வரை) PMMSYன் கீழ் வழங்கப்பட்ட மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான மாநில வாரியான விவரங்கள் இணைப்பு IV இல் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி தமிழ் நாட்டில் ரூ. 309.61 கோடியில் 548365 யூனிட்டுக்கு ஒன்றிய அரசின் ஒதுக்கீடு ரூ.82.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்கலத்தில் நடைபெற்ற தி.மு.க. ஊராட்சி செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் மைலம் தொகுதி தேர்தல் பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர்அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

மயிலம் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்போட்டியிடும்

கழக வேட்பாளர் 30 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி!

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, மார்ச் 27-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி வல்லம் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கிளை கழக செயலாளர்கள்,வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நாட்டார் மங்கலத்தில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதிஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் .

அப்போது நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.



எல்.ஏ. பேசுகையில்:

மயிலம் தொகுதியில் போட்டியிடக்கூடிய அ.தி.மு.க. வேட்பாளர் சி.வி சண்முகம் வரக்கூடாது என அ.தி.மு.க.வினரே நினைக்கின்றனர். ஏன் என்று சொன்னால் பத்தாண்டு காலத்தில் மைலத்தை விட்டு விட்டு விழுப்புரத்தில் படுத்துக்கொண்டு மைலம் பகுதிக்கு ஒரு துரும்பு கூட கிள்ளி போடாதவர்தான் சி.வி. சண்முகம்.

தி.மு.க. ஆட்சியின் அமைதியும், வளர்ச்சியும் தான் எங்களுக்கு தேவை என்று அ.தி.மு.க.வினர் சொல்லுகின்ற அளவிற்கு முதலமைச்சர் திட்டங்களும், சாதனைகள் உள்ளதாக அ.தி.மு.க. வினர் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் 50 ஆண்டுகால வரலாற்றில் எம்.ஜி.ஆரின் ஆட்சியின் போது திராவிட முன்னேற்றக் கழகம் உதயசூரியன் சின்னம் வெற்றி பெற்ற பகுதி தான் வல்லம் ஒன்றியம். நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் மயிலம் தொகுதியில் போட்டியிடுகின்ற கழக வேட்பாளர் சுமார் 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதியென அவர் உறுதிப்பட தெரிவித்தார்.

கூட்டத்தில் மயிலம் தொகுதி தேர்தல் பார்வையாளர் கடலூர் இள.புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய அமைத்தலைவர்கள் ஏழுமலை, ராமகிருஷ்ணன், வெங்கடேசன், ஒன்றிய துணை செயலாளர்கள்மணி மேகலை ரவிச்சந்திரன், ராஜலிங்கம், ஞானமூர்த்தி,முருகன்,ராஜகோபால்,பாண்டியராஜன், லட்சுமி லட்சுமணன், ஏழுமலை, மாவட்டப் பிரதிநிதிகள் திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன், பிரபாகரன், சி. கண்ணன்,அண்ணாதுரை,தாஸ், பத்மநாபன், கதிரவன், ஒன்றிய பொருளாளர்கள் பெருமாள், கண்ணன், பழனிஉள்ளிட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஊராட்சி கழக செயலாளர்கள்,வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொடங்கப்பட்ட

புதிய ரயில் பாதை திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 27-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-

கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட புதிய ரயில்வே திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்றாண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் கள்ளக்குறிச்சி தொகுதி உட்பட தமிழ்நாட்டிற்குள் இத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? மற்றும் அவற்றின் தற்போதைய நிலை என்ன?

இத்திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு மற்றும் ரயில்வே உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அவற்றின் எதிர்பார்க்கப்படும் தாக்கம் குறித்த விவரங்கள் என்ன?

திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், இடைத்தரகர்களைத் தடுப்பதற்கும் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

சிவகங்கை தொகுதியில்

அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மீண்டும் போட்டியிட எதிர்ப்பு!

சிவகங்கை, மார்ச் 27-

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் தற்போதைய மாவட்ட செயலாளர் தற்போதைய எம்.எல்.ஏ. பி.ஆர். செந்தில் நாதன் அ.தி.மு.க.சார்பில் போட்டியிட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. சட்டமன்றத் தேர்தல் போட்டியிட விருப்பமனுவினை முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் மகன், அம்மா பேரவை சார்பில் இராமு. இளங்கோவன் தொடங்க ஏராளமான அ.தி.மு.க.வினர் மனு கொடுத்திருந்தார்கள்.

ஆனால் மாவட்டச் செயலாளர் தற்போதைய எம்.எல்.ஏ. பி.ஆர்.செந்தில் நாதனுக்கு மீண்டும் ஒதுக்கீடு செய்து உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் செந்தில் நாதன் தேர்தல் பணிகளை துவங்கி விட்டார்.

இந்த நிலையில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மற்றும் மாவட்டம் முழுவதும் என் தொகுதி என் உரிமை என்ற பெயரில் அ.தி.மு.க .தொண்டர் கள் என்ற பெயரில் சுவரொட்டி ஒட்டப் பட்டு உள்ளது .அதில் தேவகோட்டையில் இருந்து சிவகங்கையில் ஏன்மாறிபோட்டியிட வேண்டும் காரைக்குடியில் போட்டிஇடலாம் சிவகங்கையிலிருந்து தேவகோட்டையில் போட்டியிட முடியுமா அதற்கு தலைமை வாய்ப்பு தருமா மாவட்ட செயலாளர் காரைக்குடியில் போட்டியிடலாமே சிவகங்கையில் கட்சியினர் புறக்கணிக்கப் படுவது தொடர் கதையாக உள்ளது. சிவகங்கை தொகுதியில் கட்சிக்காக உழைத்தவர்கள் பதவிக்கு வரமுடியவில்லை. தொண்டர்கள் உணர்வுகளை மனக் குமுறல்களை தலைமை புரிந்து கொள்ள வேண்டும்.இத்தகைய சுவரொட்டிகளை அ.தி.மு.க. தொண்டர்கள் என்ற பெயரில் மாவட்டம் முழுவதும் ஒட்டி உள்ளார்கள் .இதனால் சிவகங்கை மாவட்ட அ.தி.மு.க.வில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த சுவரொட்டியினால் மாவட்டம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க தொண்டர்கள் முழு அளவில் தேர்தல் வேலை பார்ப்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

கமுதியில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

இராமநாதபுரம், மார்ச் 27-

இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் அ.தி.மு.க. உரிமை மீட்பு கழகத்தைச் சேர்ந்த 100 பேர் தி.மு.க.வில் நேற்று தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். வருகை தந்த அனைவரையும் தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன், தெற்கு ஒன்றிய செயலாளர் மனோகரன் ஆகியோர் வரவேற்று பேசினர். இதில் அ.தி.மு.க. உரிமை மீட்பு குழு கழக வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் முத்துராமலிங்கம், மத்திய ஒன்றிய செயலாளர் அழகு சரவணன் மற்றும் ஒன்றிய துணை செயலாளர் மணிவண்ணன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் தரைக்குடி பாலகிருஷ்ணன், கிளைச் செயலாளர்கள் மாயழகு, லெட்சுமணன், ராமகிருஷ்ணன், அழகு பாண்டியன், நகரச் செயலாளர் சதீஸ்குமார் உட்பட 100 பேர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.